**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**DVC No**.06/2022

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: விஜயகுமார் (எ.சா.1) | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் செவ்வாய்கிழமை வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் சு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**எ.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**(மனுதாரர் தரப்பு)

என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் மனுதாரரின் பங்காளி வீட்டை சேர்ந்த ஒரு பெண்மணி எனக்கு செயின் அணிவித்துள்ளார் என்றால் சரிதான், மேற்படி செயினானது எனது அம்மாவின் அப்பா மனுதாரரின் உறவினரிடம் கொடுத்து அணிவிக்கப்பட்டது. நான் சொல்வது போல் செயின் கொடுக்கவும் இல்லை என்றாலும், அது அணிவிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி விவரத்தை நான் சமூக நல அலுவலரிடமோ அல்லது நான் தாக்கல் செய்த பதில் உரையிலோ தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 புகைப்படத்தில் ரொக்கத்தொகை பணக்கட்டுகளாக மனுதாரரின் உறவினர் என்னிடம் திருமணத்தின் போது கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான், எனது அப்பிச்சி தான் மனுதாரர்களால் பணம் கொடுக்க முடியாமல் அவமானம் ஆகிவிடும் என்பதால் கொடுத்தார்.

2. ம.சா.ஆ.9 ஆவணத்தில் ரொக்கம் தட்டில் வைத்து கொடுக்கப்பட்டும், மனுதாரர் தங்க செயின் ஆரம் மற்றும் நெக்ளஸ் போடப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். ஈரோடு மாவட்ட சமூக நல அலுவலரிடம் நான் எழுதி கொடுத்த பதில் உரையில் என்னுடைய அப்பிச்சி தான் மேற்படி நகை மற்றும் பணத்தை கொடுத்ததாக கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் போட்ட எதிர் உரையில் மேற்படி நகை மற்றும் பணத்தை எனது அப்பிச்சி கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.27 14:05:16 +0530

நான் ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழவேண்டி மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனுவில் மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் வேண்டி இ.ம.எண்.02/2021 என்ற எண்ணில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு தாக்கல் செய்த பின்னிட்டு மனுதாரருக்கும், அவரது மகளுக்கும் ஜீவனாம்சம் வழங்க உத்தரவு பிறப்பக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஜீவனாம்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னிட்டு மனுதாரருடன் சேர்ந்து வாழ போடப்பட்ட மனுவை வாபஸ் பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணமே என்னிடம் இல்லாததால் தான் ஜீவனாம்ச உத்தரவு மனுதாரருக்கும், மகளுக்கும் பிறப்பிக்கப்பட்ட பின்னர் மனுதாரருக்கு ஜீவனாம்சம் செலுத்தக்கூடாது என்று F.C.O.P.No.337/2021ஐ வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு நடத்துவதற்கான செலவையும் மனுதாரருக்கு செலுத்தவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரருக்கும் அவரது மகளுக்கும் நாளது தேதிவரை ஜீவனாம்சம் செலுத்தவில்லை என்றாலும் அந்த வழக்கு நடத்துவதற்கான தொகையையும் நீதிமன்ற உத்தரவுப்படி நான் செலுத்தவில்லை என்றாலும் சரிதான். மேற்படி உத்தரவில் மகளை என்னிடம் காண்பித்தால் தான் ஜீவனாம்சம் மனுதாரருக்கு செலுத்தவேண்டும் என்ற குறிப்பிட்ட உத்தரவு எதுவும் இல்லை என்றால் சரிதான். அந்த உத்தரவு 31.05.2023ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஜீவனாம்சம் கோரி இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது 28.05.2022 என்றால் சரிதான்.

4. மனுதாரர் நாளது தேதிவரை எனக்கு எதிராக என்னுடன் சேர்ந்து வாழ முடியாது என்று விவாகரத்து கோரி எந்த விவாகரத்து மனுவும் எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மாண்புமிகு சார்பு நீதிமன்றம், கொடுமுடியில் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், பலமுறை அழைத்தும் என்னுடன் சேர்ந்து வாழாததால் விவாகரத்து மனு தாக்கல் செய்தேன். ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ போடப்பட்ட மனுவை வாபஸ் பெறும்போது நான் பலமுறை அழைத்தும் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ மறுக்கிறார் அதனால் இனிமேல் சேர்ந்து வாழ்வதற்கு எந்த சாத்தியமும் இல்லை என்று

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.27 14:05:23 +0530

நான் விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்ய உள்ளேன் என்ற விவரத்தை நீதிமன்றத்தில் பதிவு செய்து சேர்ந்து வாழ போடப்பட்ட மனுவை வாபஸ் பெற்றேனா என்றால் இல்லை.

5. ஈரோடு மாவட்ட சமூக அலுவலர் என்னையும், மனுதாரரையும் என்னுடைய சகோதரியையும், என்னுடைய தாயாரையும், எனது பாட்டியையும் இந்த மனுவின் காண்பித்துள்ள எதிர் மனுதாரர் அனைவரையும் விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி விசாரணைக்கு பின்னிட்டு தான் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அறிக்கையில் காண்பித்துள்ள சங்கதிகள் எல்லாம் மனுதாரருக்கு கிடைக்கவேண்டிய பரிகாரங்கள் என்று தெரிவித்து அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்பித்துள்ளார் என்றால் சரிதான். தாக்கல் செய்துள்ள அறிக்கை தவறு, முறையாக விசாரிக்கப்படவில்லை மனுதாரருக்கு அவ்வாறு பரிகாரங்கள் கிடைக்கப்பெற வேண்டியதில்லை என்றும் அதனை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும், அதற்கு மேலதிகாரிகளிடமோ அல்லது மாண்புமிகு உயர் நீதிமன்றத்திலோ எந்த மேல்முறையீடும் செய்தேனா என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை. மேல் முறையீடு செய்யப்பட்டதற்கான எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த மனுவுடன் எனக்கு சொத்து உள்ள விவரம் மற்றும் கடன் உள்ள விவரங்களை குறித்து ஒரு அறிக்கை என்னால் கையெழுத்து செய்து சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரிதான்.

6. மனுதாரர் என்னென்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரத்தை நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். மருதியப்ப கவுண்டர் மகன் முத்துசாமி என்பது என்னுடைய தகப்பனாரின் அப்பா ஆவார். எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் உள்ள விவரத்தை ம.சா.ஆ.7,8ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மருதியப்ப கவுண்டர் மகன் முத்துசாமியும் உயிருடன் இல்லை, முத்துசாமியும் உயிருடன் இல்லை. முத்துசாமியின் மகன் தங்கவேல் அதாவது என்னுடைய தகப்பனாரும் உயிருடன் இல்லை. என்னுடைய குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துகொண்டோமா என்றால் இல்லை. என்னுடைய குடும்ப சொத்துக்களை பொறுத்து என்னென்ன சர்வே எண்ணில் என்னென்ன

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.27 14:05:28 +0530

சொத்துக்கள் உள்ளது என்ற விவரங்களை நீதிமன்றத்தில் கேட்டால் கொண்டு வந்து சமர்ப்பிக்க முடியுமா என்றால் முடியும்.

**மனுதாரர் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.01.27 14:05:34 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.